# தயவு

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவுள்ளக் கருத்தின்படி, உலகெலாமுள்ள சன்மார்க்க அன்பர்களின் பயன் கருதி, இந்திய நாட்டில் தென்தமிழ் நாட்டில், மதுரையம்பதியை அடுத்த திண்டுக்கல் தயவு சத்திய ஞானக் கோட்டத்தில் இருந்து தயா ஒளிக்கதிர்களைப் பரப்பிக் கொண்டிருக்கும், தயாநிதி சரவணாநந்த சுவாமிகளின் அருட் பேருரைகள்.

---000---

தயவே கடவுள் தயவே அருட் பெருஞ் ஜோதி

---000---

ஏறா நிலைமிசை ஏற்றி என்றனக்கே
ஆறாறு காட்டியஅருட்பெருஞ்ஜோதி
என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது
யாதெனில் தயவு- திருவருட் பிரகாச வள்ளலார்

சிரநடு "தயா ஒளிநாம்" என்பதைப் பற்றி நிற்க அதன் பேராற்றலே நம்மில் பெருகி, உணர்விலும், உயிரிலும், உடலிலும் பாய்ந்து கொண்டே இருக்கிறது. அது நிரம்பி நம்மைத் தயானந்த வண்ணமாக வாழ்விக்க உள்ளது.

**---தயாநிதி சுவாமி சரவணாநந்தா---**

**சத்திய ஞானக் கோட்டம், நிர், நாகசாமி அய்யர் சந்து, கீழரத வீதி, திண்டுக்கல்.**

------

## அருட் பெருஞ் ஜோதி "தயவு" இன்ப வாழ்வு

1. ஒன்றுமில்லாத சூனியத்தில் "அருவமாயும்" நிறை பிரபஞ்ச தோற்றத்தில் உருவமாயும், நித்தியமாய் உள்ள பரம்பொருள் பக்குவ மனிதன் உள்ளத்தில் அருவுருவாய் அருள் வடிவமாய் வெளிப்பட்டு விளங்குகின்றார்.

2. இம் முக்கூறாகிய கடவுள் உண்மைதான், வள்ளலார் அக நின்று கண்டு காட்டியுள்ள "அருட் பெருஞ் ஜோதி கடவுள் விளக்க நிலை".

3. அனாதி நித்திய அருட்பெருஞ்ஜோதிக் கடவுள், மெய்ஞ் ஞானத்தில், "அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை"யாக எழுந்தருளி ஆட்கொண்டுள்ளார். அவ்வக நிலை நின்றே, நம் உணர்வும், உயிரும், உடலும் தோற்றி நாம் ஒவ்வொருவருமாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

4. அவ் வருட்ஜோதிக் கடவுளே அன்றி "நாம்" என்று சொல்லிக் கொள்வதற்குத் தனியாக ஒன்றும் இல்லை.
அவரே நாமாய் இருக்கின்றது உண்மை.

5. இதனை அறியாது ஜடபூத உயிருடம்பு நிலையை நாம் என எண்ணி, கடவுளுக்கு அயலாய் நாம் இருப்பதாகக் கருதுவதே ஆணவ அகங்கார மறைப்பு. இதனால் தேக போக வாழ்வில் பிழைத்துக் கொண்டே இருப்பதும், இதனை விடுத்து உட்கலந்து ஒழிவதும் தவறே.

6. சுத்த சத்விசாரத்தால் சிரநடு சிற்சபையாம் சத்திய ஞான சபையிலே, அருட்பெருஞ்ஜோதியைக் கண்டும், அதுவே நாமாயும் இருப்பதை அறிந்தும் நிற்றல் வேண்டும் முதலில்.

7. அங்கிருந்துதான் தன் தனிப் பெருங் கருணையால் யாவையும் ஆண்டு கொண்டேயுள்ளார். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். ஆதலின் உண்மையில் அவரேயாக உள்ள நாமும் ஜீவ கருணையால் நிரம்பிட நினைவெல்லாம், சொல்லெல்லாம், செயலெல்லாம் கருணை மயமாகிட வாழ்ந்து வரல் வேண்டும். இப்படி அருட்ஜோதி நிலை நின்று தனிக்கருணை வாழ்வு வாழ்ந்து வந்தால், அதுவே நம்மை அதன் வண்ணமாக்கி வாழ்வித்தல், சத்தியம்.

8. திருவருட் பிரகாச வள்ளலார், இப்படித் தான் தனது உள்ளமாகிய ஞான சபையிலே அருட்பெருஞ் ஜோதியைக் கண்டு, கலவாமற் கலந்து அதுவாகி நின்று,கருணை பெருகப் பெருக வாழலானார். முடிவில் அந்த அருட்பெருஞ்ஜோதியே அருட்பிரகாசரில் நிரம்பி அருட்பிரகாச வள்ளல் தோற்றத்தோடு என்றும் வாழ வந்து விட்டுள்ளார்.

9. இப்போது, அருட்பெருஞ்ஜோதிக் கடவுள்தானே அருட்பிரகாச வள்ளல் என நிலவுகின்றது மெய்யாம். சித்தி வளாகத்தில் விளங்குகின்ற அருட்ஜோதி வள்ளல் நம் ஒவ்வொருவரின் சித்தி வளர் அகமாகிய ஆன்ம உள்ளத்தில் இருந்து "தயவு" செய்து கொண்டிருப்பது சத்தியம். ஆகையால், நாமும் அகமிருந்து "தயவு" பெருக அனகமாக வாழ்வது முறையாகும்.

10. நம் அருட்பெருஞ்ஜோதி ஒன்றே ஒன்றுதான் உண்மையில் இருக்கினறது. அது ஒன்றாகவே இருந்துகொண்டு, தானே பரிபூரணமாய்ப்பிற எவ்வான்மாக்களிலும் மறைந்து கிடக்கின்றதாகத் திருவருளாலே உணர்த்தப் படுகின்றோம்.

11. நம் அருட்ஜோதி பதியின் பெருமை யாதெனில், தான் ஒரு ஆன்ம சிற்றணுவில் நிலைத்து இருந்து கொண்டு தன்னைச் சூழ ஜீவ தேகத்தையும் போகப் பொருள்களையும் தன் அருள் துணையால் வருவித்துக் கொண்டு விளங்குகின்றதாம். தனது அருள் உண்மை வெளிப்படற்கென்றே வேண்டுவன எல்லாம் தருவித்துக் கொண்டிருக்கின்றதாம்.

12. தன்னைத் தான் வெளிப் படுத்திக் கொள்ளற்காகவே, உள்ளிருந்து ஆளுகின்ற ஆன்மபதி இத்தேகத்தைத் "தன் சுதந்தரத்தாலேயே" (திருவருட் சுதந்திரம்) வருவித்துக் கொண்டுள்ளார்.

13. இறைவனே அகநின்று, அனகமுற்று நித்தியானந்த வாழ்வு கொண்டு நிலவ இம்மனிதனாய் வந்துவிட்டுள்ளார் என்பது உண்மை.

14. அக ஆணை - அக ஒருமைவடிவில் நிலைத்து இருந்துகொண்டு தயை வளர்த்தலே நம் கடமையாம். நம்மினின்று ஒளி வீசிச் செல்லுகின்ற தயாஜோதிக் கதிர்களே, நமக்குத் தேவையான நம் தயா இன்ப வாழ்வுக்கு உண்மையில் வேண்டப்படுகின்ற யாவுமாய் வந்து வந்து சூழ்கின்றனவாம். ஆகையால், அப்படி வந்து சூழுகின்ற ஒவ்வொன்றும் நம் அகத்திலிருந்து பிறப்பிக்கப்படுகின்ற தயவாணையின்படியே வருவதாக அறிந்து, விருப்பு, வெறுப்பின்றி மனம் ஒப்பி, உளம் நெகிழ்ந்து தயவு செய்தல் வேண்டும் இது நம் கடமையாகும்.

அக ஆணையை மறந்துவிட்டு புற வடிவில், விருப்பு வெறுப்போடு கூடிய மனத்தைச் செலுத்தி அவற்றில் நாட்டினால், நமக்கும் வாழ்வில்லை, சூழ்நர்க்கும் பயனில்லாது போம். மேலும், நாம், ஒருவரே பூரணமாய் அகத்திலிருந்து கொண்டிருக்க புறத்தே காணப்படுகின்ற, அறியப்படுகின்றவர்கள், எவராயினும், எக்காலத்தவராயினும், எத்திறத்தவராயினும், உண்மையில் நாம் ஒருவர்தானே அவரவர்களின் அகத்தில் இருந்து கொண்டு, ஏகதேச அருள் வெளிப்பட அவர் அவர்களின் புற வண்ணமாய்த் தோற்றியுள்ளதாக அறிகின்றோம். ஆகையால், நம்மையே நாம் எங்கும் கண்டு நிற்றல் வேண்டும்.

இதுவே உண்மையான தயவு இன்ப வாழ்வு ஆகும்.

15) மனிதன் ஜீவ தயவால், பொறிபுலன் உணர்வுக்குமேல் சென்று அகமாகிய ஆன்ம நிலை நின்று "தயவு வாழ்வு" ஏற்கவேண்டும. அப்போதுதான் மனிதனுக்கு சச்சிதானந்த அனுபவ வாழ்வு கைகூடும்.

## முத்தியும், முத்தேக சித்தியும்.

16) ஆண்டவரின் தயவு ஆணைப்படி, அகநின்று வாழ்வோமானால், அவர் செயல் நம் மூலம் வெளிப்பட்டு, எல்லோருக்கும் பெரு நன்மை விளைவிப்பதோடு, நமக்கும் பேரின்பப் பெருவாழ்வு உண்டாவது நிச்சயம். அப்பெருவாழ்வில் சுத்த, பிரணவ, ஞான தேக சித்தி விளங்கும்.

17) தயவு தரும் அனுபவம்.

"த" ஞான தேகமாக அருவமாக இருக்கின்றது.

"ய" ஆன்மா, பிரணவ தேகமாக அருவுருவத் தோற்றத்தோடு விளங்கும். இதுவே அருட்பிகாசத் தோற்றம்.

"வு" கடவுட் செயலை வெளிப்படக் கொண்டிலங்கும் நித்திய சுத்த வடிவம்..

18) மேற்கண்ட தயவு அனுபவம் பெறுவதற்கு சுத்த தயா சத் விசாரத்தால் சிரநடு சிற்ஜோதியில் "தய" என இருந்து கொண்டு "வு"கர பரோபகாரச் செயல் உடலிடம் இடையறாது புரிந்து கொண்டிருத்தல் இன்றியமையாததாகும்.

19) சத் விசாரத்தில் கண்ட தயா அனுபவத்திற்காக தேகேந்திரிய பொறிபுலன்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள

வேண்டும். அசட்டையாலும், அக்கிரமத்தாலும், அதிக்கிரமத்தாலும், கேடுவிளையாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். விசாரத்தோடு கூடிய நற்பழக்க வழக்கத்தால், தெய்வப் பண்பாகிய தயவு விளைவு கொள்ளும்.

20) தயவு ஒளியான கடவுள் உண்மை வடிவை நாம் நம் சிரநடு கொண்டுள்ளோம். அதுவே நம் உண்மையாய் உள்ளதையுணர்ந்து கொள்ளாமல், உடல் வடிவை நாம் என மயக்கறிவால் கொண்டு வீண் அவத்தைப் படுகின்றோம். உடற் பற்றற்று, அக வடிவினின்று தயா இன்ப வாழ்வு வாழ வேண்டி உள்ளது.

21) அக வடிவம் அறிவுச் சொரூபமே. அது ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்றே, தான் விளங்க விசேட காரணத்தால், பல்வேறு உயிரின வடிவினின்று பிரகாசிக்கின்றதாம். மனிதனில் இவ்வக வடிவம் அவனது ஆன்ம சொரூபமாகக் கண்டு கொள்ளப்படுகின்றது.

22) சுத்த ஆன்ம சொரூபம்.-

அருள் ஞான விசாரத்தில் ஆழ்ந்து எழும்போது, நாம் சுத்த ஆன்ம சொரூபியாய் இருப்பதை அறிகிறோம். திருவருளே உண்மையில் நாமாக இருக்கிறது. நம்மிடம்இருக்கும் ஆணவத்தை ஒழித்து விடுவதன் மூலமாகத்தான் இந்த உண்மையை அறிந்து கொள்கிறோம்.

23) இப்பிறப்பிலேயே, இந்த மனித உடலுடனேயே திருவருள் துணையுடன் அகநிலையில் நித்திய ஆன்ம சொரூபியாய் இருந்து வாழத் தொடங்க வேண்டும். அப்போது திருவருளே தன் அருள் அமுத சக்தியால், நமது உடம்பை அழியாமல் செய்து விடும்.

24) உண்மையான வாழ்வு என்பது இறை இன்பத்துடன் இவ்வுலகில் நிலைத்து இருக்கும் வாழ்வுதான்.

25) அனக நெறி.-

நாம் அகத்தில ஒருமையாய் நின்று அனகமாய் விரிந்து வாழத் தொடங்குவோம். அந்தஅகநிலைமையினின்று நழுவி புறத்தில் சென்று விடக் கூடாது. அகநிலை பிறழாது தான் புற

உலகில் வாழ வேண்டியிருக்கின்றது. அதுதான் சுத்த சன்மார்க்கம் வழங்கும் அனக நெறியாம்.

26) இப்போது, நம் ஆன்ம நிலையேகடவுள் நிலையாகவும் அறிந்து அருள் இறைவாழ்வு தொடங்கப் பெறவேண்டியுள்ளோனம். இந்த அக நின்று ஓங்கும் அருள் வாழ்வு ஆரம்பிக்கப் படுகின்ற இறையருள் சக்தி முதலில் ஆன்ம உணர்வில் நிரம்பி, உயிரில் பரவி, உடலில் பெருகி நின்று சூழுலகு எங்கும் என்றும் பரப்பிக் கொண்டிருக்கலாகின்றதாம். இப்படி அழியாப் பேருடம்பில் அகநிலை நின்று வாழுமுறைதான் வள்ளல் பெற்ற அருட் பிரகாச வடிவப் பெருநிலையாகும்.

27) மெய்யான நிறை இன்ப வாழ்வு

"அம்பல வாழ்வு" உலகில் மெய்யான நிறை இன்பவாழ்வு பெறுவதற்கு, ஜீவதயா நெறி அடைந்து சத்விசாரத்தால் சத்துப் பொருளாகிய அருட் பெருஞ்ஜோதி சபையைச் சார்ந்து நின்று வர வேண்டியிருக்கிறது.

28) இந்த அம்பல வாழ்வு சேராமல், தயவில்லாத் தவமுயற்சி எதனாலும், பிற எவ்வகை மார்க்கத்தாலும், துன்பங் கலவாத இன்ப வாழ்வு பெற முடியாதாம்.

29) அகத்தில் பொருந்தி இருந்து கொண்டு சூழ்நிலைக்கு ஒப்ப தயவுச் செயல் புரிந்து கொண்டே இருப்பதுதான் திருவருள் ஆணையாம்.

30) சுத்த சத்விசாரத்தால் மனிதன் இம்மேனிலையுற்றிருந்துகொண்டு ஜீவ தயவுத் தொண்டு செய்தலே, பிறவுயிர்க்கு உண்டி கொடுத்து உயிர் விளக்கம் செய்தலும், மெய்ஞ்ஞானம் புகட்டி உள்ளொளி கூட்டி அகவிளக்கம் செய்தலுமாம்.

தயவு செய்.

31) தயவு செய் என்றால் சத்விசாரத்தால் கடவுள் ஒளியைப் பற்றிக் கொண்டு, மனம், வாக்கு செயல் எல்லாம் அகமிருந்து அனகமாக வெளிப்படச் செய்தல் ஆகும்.

32) எல்லோர் பசிக்கும் உணவு-

பசிப்பிணியைப் போக்கிப் பசியின் தத்துவமாகிய கடவுட்ஜோதியை வளர்த்தல் நல்லதே.இது ஏழை

எளியவர்களுக்கு மட்டுமின்றி எல்லா வசதி உடையவர்களுக்கும் தேவையான ஒன்றாய் இருப்பதால், எவர்க்கும் உண்டி அளித்தல் பொருத்தமானதே.

33) கடவுள் தயவேஇன்று பசியின் தத்துவமாக அறியப்படுகின்றதால், மனிதன் கடவுளை அடைவதற்கு, கடவுள் தயவைப் பூரணமாகப் பெற்று வாழ்வதற்கு, ஜீவதயவு பூண்டவனாகி, பிறர்க்குப் பசியினால் துன்பமும் அழிவும் நேராதபடி உண்டி வழங்கும் உயர் திருப்பணியை மேற்கொண்டு ஒழுக வேண்டும்.

34) உளத்தில் இடையறாத சத்விசாரமும், உடலில் சதா பரோபகார நன் முயற்சியும் விளங்கும்படி பழக்க மேற்கொள்ள வேண்டும். அப்போது பேரருட் சக்தியாம் அன்னையே உதவுவாள். அந்த அருள் உதவிதான், வேண்டாதவற்றைச் சிறிது சிறிதாக விலக்கி விட்டு வெற்றி தரும்.

35) தலைநடுத் தலத்தே தயவு உணர்வோடு நிலைத்திருந்து கொண்டு, தனது தயவு ஆற்றலை தேகேந்திரிய கருவி கரணங்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டு வாழ வேண்டும். இதுவே எல்லோருக்கும் உண்மையான இன்ப வாழ்வை வழங்குவது சத்தியம்.

36) ஒன்றாகிய அருள் ஒளிப்பரம் பொருளே உள்ளிருந்து எவருமாய்த் தோற்றி தன் உண்மையை ஏற்பிக்க விளங்கிக் கொண்டிருப்பதாலே, அவர்மயமாய் அக நின்று அனகமாய் வாழத் தொடங்கி விட்டால், அவரே நாமாய் நாமே அவராய்த் திரிந்துமாறி உலகமெல்லாம் திருந்தத் தயவுத் தொண்டு புரிந்து கொண்டே வாழ்வோம்.

37) கடவுள் உண்மையைத் தன் ஆன்ம சிற்சபையிற் கண்டு திருமுன் நின்று பலவாறு முறை விட்டும், பிரார்த்தித்தும், தியானித்தும் தன்னிலை மறந்து பதிநிலையில் ஒன்றிய பின்னர் பதி தயவுச் செயல் விளங்க வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

38) தான் அது என்ற உணர்வு கெடாமல் சகஜ வாழ்வு நடத்திக் கொண்டிருக்க வேண்டும். இதில் சுகம், துக்கம்,

ந்னமை, தீமை, நினைப்பு மறப்பு என்பது பாதிப்பது இல்லையாம்.

39) தயாபதியின் திருவடி ஒருவனின் உள்ளத்தே திரிசிக்கவும், பரிசிக்கவும் பெறுகின்றதோ அப்போதே இறை வாழ்வு ஏற்பட உள்ளதாம். இவ் அனுபவ வெளியீட்டிற்கே, தயா ஆட்சி அக நின்று சதா அனகமாகப் புரியப்படுகின்றதாம்.

சிற்சபையில் சிற்றொளிப் பிழம்பு

40) நம் சிர நடுவில் இருக்கும் சிற்சபையில் சிற்றொளிப் பிழம்பாக விளங்குகின்றான் இறைவன். சிற்றொளிப் பிழம்பாக விளங்கும், இறைவனை நம் புறக் கண்களால் பார்க்க முடிவதில்லை. என்றாலும் இறைவனை நம் சிற்சபையில் சிற்றொளிப் பிழம்பாகக் காண்பதாகவே பாவித்து அதனையே நினைந்து நினைந்து உணர்ந்து, உணர்ந்து, நெகிழ்ந்து, நெகிழ்ந்து பழகி வரவேண்டும். இந்தப் பழக்கம், முடிவில் அந்த சிற்றொளிப் பிழம்புடன் நம்மை அசைவறத் த்ங்கும்படிச் செய்து விடும். அந்த ஒளிச்சுடரே நாமாக ஆகி விடுகிறோம். நாமே அதுவாகவும் ஆகி விடுகிறோம். அது எங்கும் நிறைந்து இருப்பதால் நாமே அதுவாய் எங்கும் இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டும். இந்த நினைவுடன் விருப்பு வெறுப்பின்றி தயா உணர்வுடன் வாழ்ந்துவர வேண்டும்.

41) சித் வடிவத்தை சிரநடு கண்டு, தெளிந்து ஒன்றி, சுத்த அன்பாலே ஒழுகிட வேண்டும்.

## அக உண்மை நிலையம்.

42) நம் சத்திய ஞானக் கோட்டம் முக்கிய அகத்தில் விளங்குவதே. நமக்கு இவ்வக நிலையே உண்மை நிலையாகும். இதில் உள் திகழ் ஒன்றே அயல் அறியா எங்கும் உள்ள ஒன்றாகும்.

## அருட் கனிவும் பயனும்

43) அக ஒளி பெருகினால்தான் அருட்கனிவு நிரம்பும். அது உள் வளர வளர புற உண்டியின் அவசியம் குறைந்து கொண்டே வரும். அப்படி குறைந்து கொண்டுதான் வரவேண்டும். முடிவில்

அருள் ஒளி நிரம்பிடும் போது புறத்துணை முற்றிலும் தேவைப்படாது, தனித்து விளங்கக் கூடியதாகிவிடும்.

அருள் ஒழுக்கத்தில் அகம் ஒன்றி நின்றால்தான் அவ்வருள் விழி திறக்கும். காட்சியும் பயனும் உண்டாம்.

## அருள் அனுபவம்

44) அருள் அனுபவம் வெற்று அறிவாலும் பாவனையாலும் கிடைக்கப் பெறுவது அல்ல.

தயா ஒழுக்கத்தோடு அகன் ஒன்றி நின்று அன்பு அல்லது தயவுச் செயல் புரியப்புரியத்தான் அவ்வகத்தில் அருளாய் கனிகின்றதென்றும் திருவருளாலே உணர்த்தப்படுகின்றோம்.

## 45) உயிர்ப் பணி

நம்மைச் சுற்றியிருக்கும் உயிர்களுக்கு உயிர்விளக்கப் பணியும் அறிவு விளக்கப் பணியும்ஆற்றி வரவேண்டும். இவ்வாறு உயிர் விளக்கப் பணி செய்து வந்தால் நம் சிர நடுவில் இருக்கும் ஞானச் சுடரே அமுத ஜோதியாக ஆற்றலுடன் பெருகும். நம் உயிரிலும், உடம்பிலும் நிரம்பித் ததும்பும். அப்போதுதான் கடவுளின் தன் மய ஆனந்தத்தை நாம் உணர்ந்து அனுபவிக்க முடியும்.

## 46) தன்னை ஒளித்தல்

தான் ஒரு சன்மார்க்கி என்பதை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல், உள்ளத்தில் அருட்பெருஞ்ஜோதியையும், வெளியில் தயவுப் பணியையும் ஏற்று, விருப்பு, வெறுப்பு இல்லாமல் உயிர்களுக்குத் தொண்டு செய்து கொண்டு இருக்க வேண்டும். இதுதான் சுத்த சன்மார்க்கம்.

இங்கு, தன்னை ஒளித்தல் என்பது, தான் என்ற தற்போதம் அறுத்து, தன்னை ஆண்டவனிடத்தில், முழுமையாக ஒப்படைக்க வேண்டும் ஆம்.

47) இந்த சத்தாம் அருட்பெருஞ்ஜோதியை அதுவே தானாகி நின்று அறிந்து அனுபவிப்பதன்றி பிறிது எவராலும் எவ்விதத்தும் அறிந்து கொள்ள முடியாதாம்.

48) திருவருள் வலத்தால் அகமிருந்த வண்ணம் அனகமாக வாழும் முறையைக் கண்டுகொண்டு இன்புறுகின்றான் இத்தருணம் மனிதன்.

49) தயவுடன் அகத்தில் நிலைபெற்று விடடால், புறத்தில் பலப்பல வேறுபாட்டுத் தோற்றம், வேறுபாட்டுச் செயல், மாறுபாடான குணம், எல்லாவற்றயைும் நீக்கி விட்டு அகத்தில் நிலை கொள்ளலாம்.

50) நமக்கு புறத்தே இருப்பனவாகத் தோன்றுபவவை எல்லாம் அகத்தின் பிரதிபலிப்பேயாகும். அவை தனித்து இருந்து விளங்குவன அல்ல.

51) புறவேறுபாட்டுத் தோற்றத்திற்குள்ளே, அக ஒருமை தயவாய் நின்று, அனக நிறை தயவு ஆக ஒளிர்கின்றதைக் கண்டு தயவு வாழ்விற் சிறக்க ஆணை செய்யப்படுகின்றோம்.

52) தலைநடுத்தயவு ஒளியாய் இருந்து கொண்டு உலகியலை நடத்துவதால் அதுவே தயவியல் வாழ்வாகிச் சூழும். அப்படி வாழ்வாரை வாழ்விப்பதும் இந்தத் தயவே.

## தான் ஒரு தான்

53) பல கோடி மக்களாக தோற்றிக்கொண்டுள்ளவர் அந்த ஒன்றான பதி ஒருவரே.

இந்த அருட்பதியைக் கண்டு நிற்கும் நாம் அந்த அருள் வண்ண உணர்வாய் இருந்து கொண்டுதான் நம் அகமுடையானே நாமாய் இருக்கின்றதோடு எவ்விடத்தும், எவ்வுயிர்கடும், எப்பொருட்கும், அடி நிலையாய்ச் சத்தாய் இருந்து கொண்டு அதுவதுவாய் அவரவராய் விளங்கிக் கொண்டும் உள்ளதாக அறிவோம்.

54) உண்மையில் நாம் "பன்மையர்" அல்ல. அகம் விளங்கும் அருட்ஜோதி வடிவினரான ஒருவரே, ஆதலின் "ஒருமையரே" ஆவோம்.

55) உள்ளது ஒன்றே உண்மையில் உள்ளது அருட்பெருஞ்ஜோதியே, நாம் என்ற வேறு இல்லையாம். எனவே சிற்சபையினின்று அயலான மயலான உணர்வை போக்கிக் கொண்டு வாழ வேண்டும்.

56) இப்போது நாம் என்றும், அவர் என்றும் பிரித்தறிதற்கில்லா ஒரு வடிவாம் அருள் ஒளி உருவாய் உண்ணின்று ஒளிர்கின்றோம்.

இந்த அத்துவிதமான நம் நிலை இயற்கையான ஒன்றே.

57) கடவுளை திரையற்ற கற்பனை வேடம் கலைந்த இயல் உண்மை வடிவொடு கண்டு இணை பிரியாது கலவாமற் கலந்து இருந்து கொண்டு வாழ ஒரு இங்கிதம் (தயவு) நமக்கு புதிதாய் வழங்கப் பெறுகிறோம். கடவுள் கலப்பு நிலையேதான் திருமணம் ஆகும். கடவுள் மணம் பெறுவதே உண்மை இங்கித வாழ்வாம்.

## கடவுளை அறிய ஓர் உளவு-தயவு

58) அருட் பெருஞ் ஜோதியை எவ்வகையிலும் அவருக்கு அன்னியமாக இருந்து கொண்டு அறிய முடியாதாம். அவரது அருள் அல்லது தயவினாலே அவரை அறிய வேண்டும்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" - திருவாசகம்.

"உளவினில் அறிந்தால் ஒழிய மற்று அளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி -
திருவருட்பா

59) தலைநடுவுட் குழிக்குமேல் சலனமற்று எதுவும் பற்றாது உள் நெகிழ்வோடு நின்றால் அறிவரிய காண்பரிய, பெறலரிய எல்லாம் வழங்கும் பரம் பொருள் நிலையையே அனுபவிக்க வேண்டும்.

இதயமே என்னோடு நேசமாய் இரு.

60) மனிதனின் கடின சித்தமாகிய மனோ நிலை, கருங்கல் மலைக்கு ஒப்பாம். ஜடமூட மனத்தில், அமைதியும் ஆனந்தமும் விளங்காததால், பலவகையில் அவத்தைகளும் துன்பமும் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். இந்த கடினமான மனக்குன்றை "அவன் அருள்" கொண்டுதான், இதனைத் தாக்கி, நீராய் உருக்கி, உள்ளொளியைப் பெருக்கி, உயர் நலம் பெறச் செய்ய முடியும்.

மனத்தின் மாண்பு, கடின நிலை களைந்து, கனிவு நிலை காணும் போதுதான் அனுபவப்படும்.

சுத்த மனம்.

61) மனம் ஒடுங்கி நிற்கும்இடம் புருவ மத்திய ஆஞ்ஞை என்னும் லலாட பீடம் எனப்படும். இங்கு விளங்கும் அலைவுறா மனம், மனோன்மணியாகக் கூறப்படும். இதுவே நிக்குணச்தத மன நிலையாகும். இப்படி ஆறாதார முடிவில் நிற்கும்போது, புறவுலக நினைவு உடல் நிலையோடு ஒடுங்கி நிற்கின்றது. வேறு எந்த விதமான எண்ணமும் உண்டாவதில்லையாம். அந்த எண்ணம் இந்நிலை நின்று தன்னையறியாமலே மெல்லென நழுவிச் சென்று உள்வளர் இறையொளியில் இரண்டறக் கலந்து பூரணப் புகலடைந்து விடுகினறதாம்.

அங்கு இருந்து கொண்டே உலகியலை அருளியலாக அனகமுற்று நடத்த வேண்டும்.

## முன் இரண்டரை நாழிகை

62) உடல், உயிர்க்கு மேலாம் ஆன்ம நிலையில் நாம் என நின்று, நாம் என்னும் உணர்ச்சி அருளால் அதுவென மாறி விளங்கும் நிலை வரவேண்டும். இதுவே அருள் அனுபவம் சேரும் நிலையாம்.

## பின் இரண்டரை நாழிகை

63) அப்போது, அருள் ஒளியாலே ஆன்ம நிலையும், உயிர் நிலையும், உடல் நிலையும் அழியாத திரிதேகத்துவ அனுபவம் கொண்டு அழியாமல் விளங்கலாகின்றதாம்.

## உண்மையான மனித வாழ்க்கை

64) ஒவ்வொருவரும் அவரவர் சிர நடுவில் இருக்கும் சிற்றம்பலமான சத்திய ஞான சபையில் எழுந்தருளி இருக்கும் அருட்பெருஞ்ஜோதியுடன் பரிபூரணத்வம் பெற தியானத்தின் மூலமாக ஒன்றி இருக்கப் பழக வேண்டும்.

65) சிற்றம்பலத்தில் அருட்பெருஞ்ஜோதி இருப்பதை உணர்ந்து அதைஅங்கிருந்து எழுப்பி அதனுடன் ஒன்றி அதன் முழு ஆற்றலையும் பெற்று வாழ்வதுதான் உண்மையான மனித வாழ்க்கை.

## திருப்பள்ளி எழுச்சி

66) கற்பனையையும் பாவனையையும் கடந்து உண்மை நிலைக்கு வருவோம். அமைதியான சூழ்நிலையில் அமர்வோம். அருளில் பற்றுக் கொள்வோம். லலாடபீடமான புருவ நடுவிருந்து சிர நடுவில் வீற்றிருக்கும் அருட்பெருஞ்ஜோதியைத் திருப்பள்ளி எழ வேண்டிக் கொள்வோம். நமது வேண்டுகோள் நிறைவேற்றப்படும்.

67) "அருட்பெருஞ்ஜோதியே இப்பொழுதே எம்மை ஆட்கொள்வதற்கு எழுந்தருள வேண்டும். தேவதேவா பேரின்ப வெற்றி கொடுக்கக் கூடிய தங்கள் திருவடிகளை எம் சிரத்தின் மீது சூட்ட வேண்டும். எம் சிரநடுவில் உள்ள திருப்பெருந்துறையில எழுந்தருளிஇருக்கும் அருட்பெருஞ்ஜோதி சிவமே அங்கிருந்து எம்மை ஆண்டருள் புரிய வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி வாழ்க

68) அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தான் தனித் தலைமை பெற்ற பெருங்கடவுள். அவர் மனித குலத்தின் ஆணவம் நீங்கி நல் உணர்வு பெறுகிற காலத்தில் அவர்களிடையே தோன்றுவார். இந்த நிலையில்தான் உலகம் அறிந்து கொள்ளும்படி கடவுள் வாழ்கிறார் என்று சொல்ல முடியும். அதனால்தான் ஆண்டவரை உலகில் வாழ வர வேண்டும் என்று அவரை "வாழ்க வாழ்க" என்று மனதார எண்ணி வாயார வாழ்த்தி வணங்குகின்றோம்.

69) அருட்பெருஞ்ஜோதி, மனிதனின் தலை நடுவுள் அணுத்துவமாய்அருகிக் கிடப்பது உண்மையில் அதுவே உயிரை, உணர்வை உடலை ஆக்கிக் கொண்டு மனிதனாய் உலகில் வாழ்விக்கிறது. இதுதான் கடவுளேதான், உண்மை மனிதனாய் இருக்கினறதாம். இவ்வுண்மையை உள்ளபடி அறிந்து வாழுகிறான் சன்மார்க்கி.

70) பதி அனுபவம் கொண்டிலங்க வேண்டின் திருவருள் விசேடத்தினைச் சத்விசாரஞ்செய்து அகநிலை சிற்றம்பலத்தேயுற்று அருள் வாழ்வு வாழ வேண்டியுள்ளதாம்.

71) சிற்சபையைக் கண்டு அடைந்து, அருள் விளக்கம் பெற்று நிற்கும் போது வேதாகம உண்மை எல்லாம் உள்ளவாறு தெளிவாகும்.

## ஒளி மய வெளி

72) இருள் மய உணர்வு இந்திரிய கரண நிலை கடந்து ஜீவ ஆன்ம நிலைக் கண்ணுறும் போது எங்கும் அவ்வான்ம ஜோதி மயக் ாட்சியைக் காண்கின்றதாம். இவ்வொளி நிலை பெற்றார்க்கே இரவு பகலில்லை. இதுதான் ஆன்மாவுக்கு முடிநிலையாம். இது, ஆன்மா தன்மையே இழந்து த்போதம் போய், அருட்ஜோதி அனுபவத்தில் வாழக் கூடிய நிலையாகும்.

இங்கு சிற்றணுவினுஞ் சிறியதாய் உள்ள ஆன்மஅணுவினுள்ளிருந்து அகண்டாகாசப் பெருவெளி உலக அனுபவமுற்றும் கண்டு கொண்டு ஆனந்திக்க உள்ளதாம்.

## சுத்த சன்மார்க்கம்

73) இம் மார்க்க நிறை மனிதன் தானே கடவுள் மயமாய்அக அனக நிறைவு கொண்டு இருப்பதோடு, மற்ற ஒவ்வொருவரின் அக அனக நிறைவு கொண்டும் விளங்குகின்றானாம். இது, அவனது பேரின்ப அனுபவ நிலையாம்.

## சுத்த சன்மார்க்க சாதனை

74) சுத்த சன்மார்க்கத்தில் முத்தி நிலை முடிவில் பெறுவதல்ல. முதலிலேயே சுத்த சத்விசாரத்தால் கண்டு கொள்ளப்படுவதாம். க்ணடு, தான் அந்நிலையிற்றானே இருப்பதாகவும் அறிந்து கொள்ளப்படுவதாம். தான் அதுவாம் அனுபவம் பெற்றுக் கொண்டு விளங்கற்கே பயிலப்படுவது சாதனையாம். சாதனை ஏதும் இன்றி சாத்தியமாகிய அனுபவம் பெறுவது முடியாததாம். மேலும் எத்தனையோ பிறவியில், எவ்வளவோ காலமாகத் தன்னை உடல் வடிவினனாகவே கருதி, அவ்வுணர்வோடு உலகில் வாழ்ந்து வந்திருப்பவன். இப்போது தன்னை அக்கடவுள் ஆன்ம வடிவிலிருந்து வாழ்கின்றவனாக அறிந்து கொண்டு உலகிடை விளங்கச் செய்வதற்கு எவ்வளவோ தீவிர முயற்சியும், பயிற்சியும் வேண்டியிருக்கின்றன. இதற்கே உள்ளொளி நிலை நிற்றற்குச் சாதனை இடையறாது

செய்து பழக வேண்டும். சாதனையின் முடிவில் உறும் நிலையே விசார முடிவாம். வி-ஆகிய அருள் ஒளியைச் சார்ந்து ஒன்றியதே விசாரம் என்பதின் மெய்ப் பொருளாக இன்று அறிகிறோம்.

75) சுத்த நெறிப்படி உடல் நிலை, உயிர் நிலை கடந்து மூன்றாம் நிலையில் நாமும் கடவுளும், கடவுளான்ம வடிவாய் இருப்பதை யோர்ந்து நிற்க வேண்டும். அவ் ஆன்ம அணு, அருட்பெருஞ்ஜோதிக் கடவுள் சிற்றுருவே ஏ்று அருளால் அறிகின்றபோது, அதுதான் என்ற தற்போத உணர்வு நீங்கி, அது அருட்பதி என்ற அருள் ஞான அறிவு விளங்குகின்றதாம்.

76) உள் ஒளியின் அருள் அனுபவ விளைவு ஒருவருக்கு ஏற்படுமானால், அவருடைய உடல் மூப்பு அடையாமல் என்றும் இளமையுடன் முத்தேக சித்தியைப் பெற்றுத் திகழும்.

77) ஒன்றாகிய தனிப்பரம் பொருள்தானே இந்த உயிருடம்பாய் அக நின்று விளங்கிக் கொண்டுள்ளார் என்பதுதான் உண்மை.

78) ஜீவசக்தி கொண்டு விளங்கும் ஆன்மாவில்தான் மாயையின் செயல் எல்லாம் காரியப்படுகின்றன.இதனால் உயிர் உணர்வின் பசி, புலன் அவா, நோய், நொடி முதலியன உள்ளிருந்து உடற்றுகின்றது.

**ஆனால் அருட்சக்தி கொண்டு விளங்கும் ஆன்மாவில் மாயையின் செயல் காரியப்படாது.**

## சர்வ ரோக நிவாரணி

79) சிற்சபையில் காணுகின்ற அருட்பெருஞ்ஜோதியே புத்தமுதாகிறது. அருட்பெரும் மாணியாகிறது. மந்திரம் ஆகிறது. மேல்அழியாமையும் அருட்சித்தி வல்லபத் திறத்தையும் பெற்று எல்லாப் பிணிகளையும் தீர்க்கும் "சர்வரோக நிவாரணி" என்னும் மாமருந்தாகவும் ஆகிறது.

## உள் நின்று ஒளிர்க

80) நம் கடவுள் உண்மை தயவு ஆகவே இருக்கின்றது. சத் விசாரத்தால் நாமே தயாவொளி விளக்காய்

விளங்கிக் கொண்டுள்ளதை யுணர்ந்து உள் நின்று ஒளிர்கின்றோம்.

## சூழ்நர்க்குச் சுகம்.

81) நம்மிலிருந்து சதா பரவிக் கொண்டிருக்கும் ஒளிக்கதிர்கள் தாமே, நமது எண்ணமாய், சொல்லாய், செயலாய், வெளி வந்து சூழ்நர்க்கும் சுகம் அளித்துக் கொண்டேயுள்ளன. இதுதான் தயவு வேள்வியாம் வாழ்வு ஆகும்.

## ஜீவ தயவுப் பணியும் சர்வ சித்தியும்

82) எது வேண்டினும் அதனை வழங்கி நல் வாழ்வளிக்கும் வள்ளல் தன்மை கொண்டது நமது அருட் பெருஞ்ஜோதி தெய்வம். ஜீவ தயவு பணியால் எல்லாச் சித்தியும் கிடைக்கப் பெறுதல் நிச்சயம் என்றுள்ள அருட்ஜோதி வள்ளலின் ஆணை எக்காலும் மெய்யே ஆகும்.

ஒரு சுத்த சன்மார்க்கியின் பெரும்பேறு எல்லாம் அக அனுபவமே
அகம் பொருந்தி விட்டால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.
நிராசை உண்டானால் மனோ நிம்மதி தானே வந்தெய்தும்.
இறைவனை விசார வழியாற் காண்க. அருள் உணர்வினால் கூடுக.
உள்ளத் துறவு வேண்டும் (அகப்பற்று அறுத்தல்)
உடல் துறவு வேண்டாம் (புறப்பற்று அறுத்தல்)
புலனை மயக்கும் சிறு நெறி சென்று பொய்ப் போக
வாழ்வில் புக்கழுந்தி சிதைவுறுதல் திருவருட் சம்மதம் அன்று.
இங்கிதம் உறுவதற்கு அருட்பொருள் சேர்க.
செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க
கருணையும் சிவமே பொருள் எனக் கொள்க.
ஒன்று எனக் காணும் உணர்ச்சி பெறுக.

**---திருவருட் பிரகாச வள்ளலார்.---**

---000---000---000---000---000---000---000---000---000---000---